

சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 30-07-2026 அன்று, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்த விவசாயிகள், திராவிட மாடல் ஆட்சிக்காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் 3215 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கான ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு மின் கட்டணச் சலுகையாக ரூ.73 கோடி வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.



கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை – கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தனது பிறந்தநாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தேவைப்படுவதாக கடிதம் எழுதினால்

# கல்வி நிறுவனங்கள் - நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கத் தயார்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.2-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புத்தகங்கள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் மற்றும் படிப்பகத்தினர் கடிதம் எழுதினால், அவர்களுக்கு நூல்களை வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்குறிப்பிட்டுள்ளதாவது:-

**கற்றனைத்து ஊறும் அறிவு**

2018 இல் தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்றதில் இருந்து, என்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, சால்வைகளுக்குப் பதிலாகப் புத்தகங்களையே அன்பளிப்பாக வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இதுவரை இப்படி பெறப்பட்ட 6 இலட்சம் நூல்களைத் தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள நூலகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

இதன் தொடர்ச்சியாக, பாளையங்கோட்டை சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்காகவும், தாம்பரத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள நூலகத்துக்காகவும் மேலும் 5 ஆயிரம் புத்தகங்களை இன்று வழங்கினேன்.

புத்தகங்கள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், நூலகத்தினர், படிப்பகத்தினர் கடிதம் எழுதினால் அவர்களுக்கும் புத்தகங்களை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

வாசிப்பு பெருகினால்தான் தமிழ்நாடு தன் அடையாளத்தை இழக்காமல் பாதுகாக்கப்படும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்புரை!

# நன்னன்குடி நடத்திய நூல் வெளியீடு - சிறுகதை போட்டி - பரிசுகள்!

## மா.சுப்பிரமணியன் வழங்கினார்! இளவரசி சங்கர் பங்கேற்பு!

*சென்னை, ஆக.2-*

*நன்னன் குடி நடத்திய நூல் வெளியீட்டுடன் கூடிய பரிசளிப்பு விழா 23ஆம் ஆண்டாக 30.07.2026 (வியாழக்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.*

*சென்னை இராசா அண்ணாமலை புரத்தில் உள்ள திருவாவடுதுறை தி.என்.இராசரத்தினம் கலையரங்கத்தில் (முத்தமிழ்ப் பேரவை) நடைபெற்ற அவ்விழாவுக்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேரா. சுப.வீரபாண்டியன் தலைமை ஏற்று "தன்மான வாழ்வே நல்வாழ்வு" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் பற்றி திறவுரை ஆற்றினார்.*



*இவ்விழாவுக்கு திராவிட மாடல் அரசின் மேனாள் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மறைந்த பார்வதி நன்னன் அவர்கள் படத்தைத் திறந்து வைத்துப் பரிசுகள் வழங்கி "முரசில் நன்னனின் ஒலி" என்ற நூல் பற்றி திறவுரை ஆற்றினார்.*

*இளவரசி சங்கர் 'இவர்தாம் பெரியார்' (வரலாறு) - 15 "பெரியாரும் காங்கிரசும்" என்ற நூல் பற்றி திறவுரை ஆற்றினார்.*

*இவ்விழாவுக்கு திராவிட நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கி இருந்தார்கள்.*

*ஆசிரியர் கி. வீரமணி, அன்புராஜ், கவிஞர் கலி. பூங்குன்றன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி இருந்தனர்.*

*"தமிழைத் தமிழாக்குவோம்" என்ற தேர்வு நடத்தி பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கல், சிறுகதைப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கல், சுயமரியாதைத் திருமணம் புரிந்து கொண்ட 5 இணையர்களுக்கு பரிசுகள் வழங்குதல், தமிழ் வீக்கிபீடியாவில் சிறப்பான பங்களித்தவருக்குப் பரிசு வழங்குதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.*

### ஒரே நாளில் 6 படுகொலைகள்!

# வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!

சென்னை,ஆக.2-

தி.மு.க. ஐ.டி.விங்கின் வலைதளப்பதிவு வருமாறு:-

தன் திரைப்படம் ஓடும் திரையரங்குகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் காட்டும் அக்கறையை, மக்களைப் பாதுகாப்பதில் இந்தக் கையாலாகாத அரசு காட்டவில்லை!



Surge in violence against elderly: Six killed in past few days in TN

CRIME REPORT

3 மாத த.வெ.க. ஆட்சியிலேயே, சட்டம் ஒழுங்கு ஒட்டு மொத்தமாகச் சந்தி சிரித்து விட்டது.

காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் விஜய் எவ்வளவு பெரிய நிர்வாகத் திறமையற்ற கோழை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

Tamil Nadu has become the Murder Capital!

Step down if you don't know how to run a state! Tamil Nadu's mothers and elders are bleeding while this narcissist plays blame and vengeance politics!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது,

### விளம்பர மயக்கத்தில்

# தமிழ்நாட்டை வைத்திருக்க நினைக்கிறதா த.வெ.க. அரசு!

## காவிரிப் பிரச்சினையில் உடனே நடவடிக்கை எடுக்க கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, ஆக.2-

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், விளம்பர மயக்கத்தில் தமிழ்நாட்டை வைத்திருக்க நினைக்கிறதா த.வெ.க. அரசு என்றும், காவிரி பிரச்சினையில் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து கனிமொழி கருணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

எல்லாவற்றிலும் திசைத்திருப்பும் அரசியலைச் செய்துவரும் தவெக அரசு, காவிரி பிரச்சனையைத் திசைத்திருப்ப அடுத்ததாக காவிரி ஆற்றங்கரையில் கூட "ஆய்வு" நடத்தலாம்.

மாநில உரிமைகளை அடகு வைத்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டு, விளம்பர மயக்கத்தில் தமிழ்நாட்டை வைத்திருக்கலாம் என்று நினைக்கிறதா த.வெ.க. அரசு?

டெல்டாவில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதோடு, தற்போது பாதி தமிழ்நாட்டிற்கு குடிநீர்ப் பிரச்சினை வருமளவுக்கு காவிரி விவகாரம் சென்றுவிட்டது. த.வெ.க. அரசு இனியும் இப்பிரச்சனையில் மௌனம் காக்காமல், உடனடியாக நடவடிக்கை வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில்

# தஞ்சையில் ஆகஸ்ட் 3-ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

## துரை,சந்திரசேகரன் எம்,எல்,ஏ, – சாக்கோட்டை க,அன்பழகன் – தி,பழநிவேல் வேண்டுகோள்!

*தஞ்சாவூர், ஆக.2-*

*தமிழ்நாடு விவசாயிகளின் நலன்களை புறக்கணித்து, மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கோட்டை விட்ட த.வெ.க அரசை கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக தோழர்கள் திரளாது கலந்துக் கொள்ள தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்காட்டை க.அன்பழகன், தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*







*இதுகுறித்து அறிக்கை வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும் மேகதாது பிரச்சினையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவவிட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026 திங்கட்கிழமை) காலை: 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வரவேற்புரையாற்றுகிறார். மனிதநேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம். ஹெச். ஜவாகிருல்லா, ம.ஜ.க.மாநிலத் தலைவர் மு.தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் நெல்லை முபாரக், தி.க. மாநில பொது செயலாளர் இரா.ஜெயக்குமார், தே.மு.தி.க மாவட்டச் செயலாளர் பி.சிவநேசன், மக்கள் நீதி மையம் மாவட்ட அமைப்பாளர் தர்ம.சரவணன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஏ.ஆரோக்கியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கரன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, கே.என்.அருண் நேரு, கவிஞர் சல்மா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜித்து, பி.என்.மணி, உள்ளிட்ட டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர்.*

*ஆர்ப்பாட்டத்தில் விவசாய பெருங்குடி மக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள். சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*

# டெல்லியில் இ20 பெட்ரோலுக்கு எதிராகப் போராட்டம் நடத்த அனுமதி மறுப்பு!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி!

*புதுடெல்லி, ஆக. 2 -*

*இ20 பெட்ரோல் விநியோகத்திற்கு தடை விதிக்கக்கோரும் போராட்டங்களால் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது. தலைநகர் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.*

*20 சதவிகிதம் எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்துவதால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதுடன், மைலேஜும் குறைவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டுகின்றனர். இ20 பெட்ரோலுக்கு தடை விதிக்கக் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.*

*டெல்லியில் நீட் முறைகேடுகளுக்கு எதிராக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி போராட்டம் நடத்தி நாட்டின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தது.*

*அதேபோல், எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனைக்கு எதிராக E20 ஜனதா கட்சி தொடங்கப்பட்டது ஒன்றிய அரசுக்கு புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்திப்சிங் பூரி ஆகியோர் பதவி விலகக் கோரி போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில், தலைநகர் டெல்லியில் இ20 ஜனதா கட்சி போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, ஆகஸ்ட் 4 ஆம் தேதி டாக்சி ஓட்டுநர்கள் சங்கம் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.*